விலை ரூபா 1-00


புகைப்படத்துறையில்
ஓர் புதிய மாற்றம்
உங்கள் கலர்ப்படங்களை
யாழ். நகரிலேயே டெவலப்பண்ணி
பிறின்ற் பண்ணித் தருகிறார்கள்...
★கவிதாலயா★
கலர் போட்டோ
37 [351], 1ம் மாடி,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்தி அருகாமையில்]
4562



# ஈழநாடு
THE EELANADU



✶ பாஸ்போட் படங்கள்
✶ அடையாளஅட்டைப் படங்கள்
✶ திருமண விழாவா!!
✶ விசேஷ நிகழ்ச்சிகளா!!
எதுவாயினும் மிகவிரைவில்
உங்கள் புகைப்படங்களை
செய்து தருகிறார்கள்...
★கவிதாலயா★
கலர் போட்டோ
[வெலிங்டன் சந்தியிலிருந்து
10 யார் தூரத்தில்] 4561



மலர் 24 புரட்டாதி 2 ஜுலகம் 29 இதழ் 217
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18—9—82


# ஜனாதிபதி தேர்தல் அறுவர் மட்டுமே போட்டி

# மூவர் மனு நிராகரிப்பு!

## சைக்கிள் திருட்டு: 'இது' புதுவிதம்!

(யாழ்ப்பாணம்)

பூட்டப்பட்ட நிலையில் சைக்கிள் ஒன்று மர்மமான முறையில் திருட்டுப்போன சம்பவம் யாழ். நகரில் நேற்று

[8ம் பக்கம் பார்க்க]

## வேட்பு மனுவை முதலில் குமார் தாக்கல் செய்தார்

(கொழும்பு)

**இலங்கை குடியரசின் முதலாவது ஜனாதிபதித்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நேற்றுக்காலை தாக்கல் செய்யப்பட்டன.**

**ஒன்பது பேர் கட்டுப்பணம் செலுத்திய போதிலும், மூன்று பேரது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு அறுவரது நியமனப்பத்திரங்கள் மட்டுமே தேர்தல் ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.**

கட்டுப்பணத்தை முதலில் செலுத்திய அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலமே நியமனப்பத்திரங்களையும் முதலில் நேற்றுத் தாக்கல் செய்திருந்தார்.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்றுக்காலை 8 மணிக்கும் 11 மணிக்கு மிடையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

காலை 8.26 மணிக்கு தமது ஆதரவாளர்களுடன் திரு. குமார் பொன்னம்பலம் நகர மண்டபத்தை வந்தடைந்தார். 8 29 மணிக்கு நியமனப் பத்திரத்துக்கான மூன்று படிவத்தையும் தமிழிலேயே நிரப்பிக்கொடுத்தார். இவரே முதலில் வேட்பு மனுவை நிரப்பிக் கொடுத்தவராவர்.

ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன காலை சரியாக 8 மணிக்கு நகர மண்டபத்துக்கு வந்தார்.

8. 33 மணிக்கு தமது நியமனப்பத்திரங்களை அவர் நிரப்பிக்கொடுத்தார். ஒரு படிவத்தை ஆங்கிலத்திலும், மற்றைய இருபத்திரங்களையும் சிங்களத்திலும் நிரப்பிக் கொடுத்தார். அவர் பத்திரங்களைச் சமர்ப்பித்தபோது மழைத் தூற்றல் இருந்தது,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் [ஸ்ரீமா பிரிவு] சேர்ந்த திரு. ஹெக்டர் கொப்பேகடுவ

[8-ம பக்கம்பார்க்க]

## வங்கி முன்பாக மர்மப் பார்சல்!

(மாவிட்டபுரம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாகத் தலைதூக்கி வந்த வெடிகுண்டுப் பார்சல் மர்மம் காங்கேசன்துறையிலும் தலைகாட்டத் தொடங்கி உள்ளது!

காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளை அலுவலகத்துக்கு முன்பகநுழைவாயிலில் கிடந்த உருண்டைவடிவமான ஒரு பார்சல் நேற்றுக்காலை வங்கி ஊழியர்களைக் கிலி கொள்ளச் செய்துவிட்டது!

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யு தேவநாயகத்தின் விலாசம் அப்பார்சலில் எழுதப்பட்டிருந்தது.

ஆனால் அந்தப் பார்சலில் அனுப்பியவரின் பெயர் எழுதப்படவில்லை.

தபால் கந்தோருக்கு அனுப்பப்படாமல் வங்கியின் முன்பாகக் கிடந்த 'மர்மப்' பார்சல் குறித்து காங்கேசன்துறைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதும் பொலிஸார்

(8-ம் பக்கம் பார்க்க)

## சித்தவைத்திய கல்லூரியை அபிவிருத்திசபை நடத்தும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபை, 1983ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கைதடி சித்த வைத்தியக் கல்லூரியை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இக்கல்லூரிக்கு மொத்த முதலீட்டுத் தொகையாக இரண்டுலட்சம் ரூபா ஒதுக்குவதென சபை முடிவுசெய்துள்ளது.

இந்த முதலீட்டுப்பணத்தை ஒவ்வொரு எம் பி. யிடமிருந்தும் தலா பத்தாயிரம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து பெறுவதென்றும், ஐம்பதினாயிரம் ரூபாவைச் சபை ஒதுக்கீடு செய்வதென்றும், மிகுதி ஐப்மதினாயிரம் ரூபாவை பிற வழிகளில் பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சித்த வைத்தியஅபிவிருத்தி, சித்த வைத்தியத்தைக் கற்பித்தல், சித்த வைத்திய

[8ம் பக்கம் பார்க்க]

## நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள்

[கொழும்பு]

மூன்று வேட்பு மனுக்கள் நேற்று தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டன.

நிக்கவரெட்டிய முன்னாள் எம். பி. திரு. முதியான்சே தென்னக்கோன் (சுயேச்சை] வேட்புமனுக்களில் ஒரு படிவத்தில் ஒருவர் வழிமொழிந்தும்மற்றைய இருபடிவங்களில் மற்றொருவர் வழிமொழிந்ததாலும் அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

திரு. என்.எச். கீர்த்திரத்ன [சுயேச்சை] வேட்பு மனுவில் கடைசிப்பந்தி முழுவதையும் வெட்டிவிட்டதால், இவர் மனு நிராகரிக்கப்பட்டது.

கடைசிநிமிடத்தில் கட்டுப்பணம் செலுத்திய என். எச். கீர்த்திரத்தின(சுயேச்சை) முன்னர் எம். பியாக இல்லாததால் அவரது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.


ஜனாதிபதி தேர்தல்:
திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்
(குமார்)
அவர்களை ஆதரித்து
மாபெரும் பிரசாரக் கூட்டம்
தலைவர்:திரு. எஸ். யேசுதாசன் எம்.எம்.சி.
இடம்: யாழ்.திறந்தவெளி அரங்கு
காலம்: 19 - 9 - 82 ஞாயிறு மாலை.
அனைவரும் திரண்டு வருக!
4567



யாழ். நகரில் நவீனவசதிகள் கூடியது
ஹோட்டல் றெலெக்ஸ்
தேன்சிந்தும் ஐஸ்கிறீம், பொம்பே சுவீற்ஸ் வகைகளுக்கும் சுவைமிக்க கோழிப்புரியாணி வகைகளுக்கும் யாழ்.நகரில் சிறந்து விளங்கும் ஸ்தாபனம்
HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்
4559


"ஈழநாடு" அலுவலக
புதிய தொலைபேசி இலக்கங்கள்

"ஈழநாடு" அலுவலக புதிய தொலைபேசி இலக்கங்கள் வருமாறு:

✶ ஆசிரியர் பகுதி: 22389
✶ விளம்பரப்பகுதி: 24126

[புதிய தொலைபேசி இலக்கங்கள் இன்று மாலை ஆறு மணிமுதல் அமுலுக்கு வருகிறது].

# வரி விளம்பரம்

## தேவை

மட்டக்களப்பு வாழைச் சேனையிலுள்ள வயல், தென்னந்தோட்டம் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர்கள் தேவை. (இளைப்பாறிய விவசாயஉத்தியோகஸ்தர் விரும்பத்தக்கது) குடும்பத்துடன் வசிப்பதற்கு இடவசதியுண்டு. சம்பளம் பற்றிய விபரங்கள் நேரில். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S.K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4552

பெற்றோல் நிரப்பும் நிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு அனுபவமும் ஆங்கில அறிவும் உள்ளவர்கள் தேவை. விபரங்களுக்கு: S. K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4551

உழவு யந்திரம் ஓட்டுவதில் அனுபவமுள்ள டிரைவர்கள் தேவை. விபரங்களுக்கு: S K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4550

நவநாகரீக ஆடைகள் தைக்கும் நிலையத்திற்கு [பெண்கள், சிறுவர்] கட்டிங் வெட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. முகவரி சிவாஸ் இன்டஸ்றீஸ், 1003, திருநகர்- கிளிநொச்சி. 4546

பண்டாரவளையிலுள்ள பிரபல சப்பாத்துக்கடையை நிருவகிக்கக்கூடிய அனுபவமுள்ள முகாமையாளர் தேவை. விளம்பர இல. 4555, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 4555

நகைக்கடை வியாபாரத்திற்கேற்ற பெரிய அளவிலான திண்டுக்கல் இரும்புப்பெட்டி (Iron Safe) தேவை. விபரங்களுக்கு; ச. நேசராசா, 239, பலாலி வீதி, யாழ்ப்பாணம், போன்: 23089. (4556)

அச்சக வேலைகளில் அனுபவமும் பிளேட்டின் மெசினில் வேலைசெய்து அனுபவமும் உள்ள ஆள் தேவை. நற்சான்று பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4558

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள ஆட்கள் தேவை. பிஸ்கட் பேக்கிங் செய்வதற்கு பெண் பிள்ளைகளும் தேவை. உடன் நேரில்வரவும். ஆனந்த் பிஸ்கட் தயாரிப்பாளர்கள், சண்டிலிப்பாய். (மாசியாபிட்டி சந்திக்கு அருகில்). 4547

''கதிரைகளுக்கு குசன் Cushion) தைக்கக் கூடியவர்கள் தேவை. தொடர்ச்சியான வேலை உண்டு. அனுபவமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4554, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம் 4554

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் உடன்தேவை 35 வயதிற்கு உட்பட்டவர்கள விரும்பத்தக்கது நேரில் தொடர்பு கொள்ளவும். A சுப்பையா & கோ. 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 4545

## விற்பனைக்கு

மில்க்வைற் மலிவு விற்பனையும் பரிசுகள் விநியோகமும். எங்கே? வல்லிபுர ஆழ்வார் கோவில் வீதியில். எப்போது? தேர் திருவிழாவின் போது பத்துரூபாவிற்கு மில்க்வைற் சவர்க்கார இனங்களை வாங்குவோருக்கு, பொலித்தீன் பையில் பலவகை அன்பளிப்புகள், அத்துடன் கீரை விதையும் மேலதிகமாகக்கிடைக்கும். மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அவற்றைக் கொடுத்து பெறுமதி வாய்ந்தபரிசில்களைப்பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், பிரசாரப்பகுதி. 4540

மண்ணெண்ணெயில் இயங்கும் இரண்டு சக்கர உழவு இயந்திரம் பெட்டியுடன் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ந. ரகுபதி. ஊரெழு அம்மன் கோவிலடி, உரும்பராய். 4557

''Coldritor'' அமெரிக்கன் குளிர்சாதனப்பெட்டி 4 அடி உயரம் புதிய நிலையில் விற்பனைக்குண்டு. 35, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 4553

மொறிஸ்மைனர் 1000 தொடர் 4 ஸ்ரீ 9336 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''சாந்தாவாசா'', வேம்படி, கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறை. 4548

பாவிப்பில் நல்ல நிலைமையிலுள்ள 29ஸ்ரீ E L.F. மொடல் 150 மோட்டார் வான் விற்பனைக்குண்டு. 19-9-82 ஞாயிற்றுக்கிழமை நேரில் பார்வையிடலாம். உரிமையாளர்: த. புலேந்திரன், வவுணத்தம்பை வீதி, குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 4532

## பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் றிவைன்டிங், மோட்டார் இயந்திரவியல் செய்முறையுடன் பயிற்சி வகுப்புக்கள் 19-9-82இல் ஆரம்பம். C. E. T. ஐலண்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைக்கு சமீபமாக), 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4528)

## வகுப்புகள்

தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பம் 20-9-82, ஐலண்ட் இன்ஸ்ரியூட், (விகாரை எதிரில்), 58, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4531)

## WANTED

An opportunity exists for a Tamil-Christian young man between 27-32 years to migrate to Australia to pursue professional studies or employment The lady he shall marry is of good character and upbringing. She is in her mid-twenties, an Australian Citizen and is professionally employed in government service. Only those genuinely interested and with a good family background need apply to Advt. No: 4549, C/o Eelanadu Ltd., Jaffna, 4549

# பெண்களுக்குப் புத்திமதி

(புலோலி)

''பெண்கள் வீண்பொழுது போக்காமல் சிறுதொழிற்துறைகளில் ஈடுபடுவதின் மூலம் வருமானம் பெற முடியும். பனம்பொருள் உற்பத்திகளை மேற்கொள்ளுவதின் மூலம் வீட்டில் இருந்தபடியே பணம் சம்பாதிக்க முடியும். இதனை உணர்ந்தே பனம்பொருள் அபிவிருத்திச் சபை பெண்களுக்குப் பனம்பொருள் பயிற்சிகளை அளித்து வருகின்றது.''

இவ்வாறு இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்தி உத்தியோகத்தர் திரு.எ.ஜே. ஜெயராஜா சொன்னார்.

கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையத்தில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 2-ம் திகதி

சனிக்கிழமை

(18—9—82)

மேடம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்துக்கு தடைக்கல்லாக அமைவார்கள் மொட்டைக்கடிதம் ஒன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும் தொழில்துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

இடபம்: உறவுமுறைகள் பலப்படும் உற்சாகம் பெருகும் புதிய நண்பர்கள் புடைசூழ்வார் பிதாவழிச் தனமும் சேரும் வாழ்த்தும் மேலிடத்தில் உண்டு.

மிதுனம்: வணிகர்கட்கு வியாபார விருத்திக்கு இடம் உண்டு புதியமுயற்சிகள்இன்று கைகூடும் செலவினங்களும் கைக்கடங்கியதாகவே இருக்கும்.

கடகம்: பொருளாதாரநிலை சீரடையும் சிலர் வாழ்க்கையில் எதிர்பார்த்த வரவுக்கும் இடமுண்டு பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம் வெளியூரிலிருந்து செய்தி கிடைக்கும்.

சிங்கம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும் உடல் நலம் பாதிக்கப்படலாம் பொருட்களினால் பணம் விரையமாகலாம் அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

கன்னி, அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள் மனதில் அமைதி குன்றும் அயலவர்களின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும் அடக்கம் விரும்பத்தக்கது.

துலாம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

விருச்சிகம், எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம் சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும் சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு தெய்வ நம்பிக்கை வேண்டும்.

தனுசு: ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள் பிறருடைய ஆதரவும் பெருகும் தாய்வழிமூலம் நற்செய்தியும் கிடைக்கலாம் எதிர்பாராத விருந்துபசாரங் கட்கும் இடம் ஏற்படும்.

மகரம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும் பொதுத் துறையில் ஆர்வம் காட்டுவீர்கள் இல்லத்திலும் இனிமைக்கு இடமுண்டு மகிழ்ச்சிகரமான தினம்.

கும்பம்; உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவுபார்க்கப்படும் தொழில் துறையில் முன்னேற்றத்தை தடுப்பதற்கு சதி நடைபெறலாம் அகால போசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்படமுடியும்.

மீனம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் களத்திரவளியால் பொருள் வரவுக்கும் இடம் உண்டு கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் புதிய நண்பர்கள் சேருவார்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

---

அளவெட்டி தெற்கு
விநாயகர் ஆலய
## சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1683 | 2. | 751 | 3. | 1588 | 4. | 147 | 5. | 605 |
| 6. | 3863 | 7. | 1964 | 8. | 1269 | 9. | 827 | 10. | 1180 |
| 11. | 555 | 12. | 3445 | 13. | 565 | 14. | 382 | 15. | 1050 |

(4544)

---

ஓம்
ஸ்ரீ ராம ஜயம்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்

## வருடாந்த மகோற்சவம்

நிகழும் துந்துபி வருடம் புரட்டாதி 3-ந் திகதி
19-9-82 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு
கொடியேற்றம்
27-9-82 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
சித்திரத்தேர் உற்சவம்
28-9-82 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு
தீர்த்தோற்சவம்
29-9-82 மாலை 7 மணிக்கு
திருக்கல்யாண உற்சவம்
நடைபெறும்.

இங்ஙனம்
மேற்படி தேவஸ்தான
ஆதீனகர்த்தாக்கள்.

4467

---

## சவூதி அராபியாவில் வேலை ஆட்கள்
(LABOURER GRADE)

## உடனடியாகத் தேவை!

பிரமாணம்:
உயரம்:- 5' 2'' க்கு மேலும்
நெஞ்சு:- (CHEST) 32''க்கு ,,
நிறை:- 110 இருத்தலுக்கு மேல்.
வயது:- 22க்கும் 45க்கும் உட்பட இருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் பாஸ்போட்டுடனும், ஒரு போட்டோ கொப்பியும் தங்கள் முழு விபரத்தையும் ஆங்கிலத்தில் (HANDWRITTEN APPLICATION) எழுதிக்கொண்டு கீழ்க்காணும் யாழ்ப்பாண விலாசத்தில் வரும் செவ்வாய்க்கிழமை (21-09-82)லும், புதன்கிழமை (22-09-82)லும் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை நேர்முகப் பரீட்சைக்கு வரவும்.

எங்களுக்கு வேறு ஒரு ஏஜன்சியும்
யாழ்ப்பாணத்தில் கிடையாது.
வே. இரத்தினசபாபதி,
கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம்,
5, இலந்தைக்குளம் ரோட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**Construction & Development Co Ltd,**
37, S. de. S. Jayasinghe Mawatte,
NUGEGODA.
Labour Licence No. 96, Ref. No. FE / 1 /118
(4543)

---

பனை அபிவிருத்திச்சபை
## கேள்வி அறிவித்தல்

திக்கத்தில் அமைந்துள்ள பனை அபிவிருதிச்சபையின் பனம் பல் தொழில் தொகுப்பில் வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்கள் /கூட்டுத்தாபனங்களில் ரூபா 100,000/- பெறுமதியான வேலைக்குப் பதியப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1982 செப்டெம்பர் 30-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரை பனை அபிவிருத்திச்சபை தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25/-ந்தும் மீளளிக்கக் கூடிய கட்டுப்பணமாக ரூபா 250-ம் கட்டி விபரங்களையும் கேள்வி விண்ணப்பப்பத்திரத்தையும் கீழ்க்காணும் விலாசத்திலிருந்து 1982-09-20-ந் திகதி தொடக்கம் 1982-09-28-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
பனை அபிவிருத்திச் சபை.
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
1982-09-14 (4539)

# இஸ்ரேலிய படையெடுப்பு: அரபு நாடுகள் கண்டனம்!

புதுடில்லி, செப். 17

லெபனன் மேற்கு பெய்ரூட்டில் இடம்பெற்றுள்ள இஸ்ரேலிய படையெடுப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க ஐ. நா. வின் பந்தோபஸ்து சபையை உடனடியாகக் கூட்டுமாறு லெபனனும், அரபு நாடுகள் சிலவும் கோரி பந்தோபஸ்துசபைத் தலைவரிடம் கண்டன மகஜர்ஒன்றை நேற்று கையளித்துள்ளன.

அதே நேரத்தில் பந்தோபஸ்து சபையின் தலைமைச்செயலாளர், லெபனனில் இடம்பெற்றுள்ள இஸ்ரேலிய படையெடுப்புபற்றி கவலைதெரிவித்துள்ளார்.

லெபனன் இஸ்ரேலியப் படைகளின் முழுக்கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கமாயல் சகோதரர் புதிய ஜனாதிபதி?

பெய்ரூட், செப். 17

லெபனன் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனா பஷீர் கமாயல் கிழக்கு பெய்ரூட்டில் கொல்லப்பட்டதைத்தொடர்ந்து அவரது சகோதரரின் பெயர் புதிய ஜனாதிபதி பதவிக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. [உ]

# ஐ. நா. விருது தமிழகத்துக்கு கிடைத்தது

சென்னை, செப். 17

முதியோர் கல்வித்துறையில் தமிழகம் காட்டியுள்ள சிறப்பான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் ஐ நா, வழங்கும் விருது தமிழகத்துக்குக்கிடைத்துள்ளது.

இவ்விருது 7000 அமெரிக்க டாலர் பணப்பெறுமதியும், தங்கப்பதக்கமும், பாராட்டுப் பத்திரத்தையும் கொண்ட 'மொரைஸ்' விருதாகும்.

தமிழக முதியோர் கல்வி மேம்பாட்டுத்துறை இயக்குநர் திரு. தயனிடம் இவ் விருது கையளிக்கப்பட்டுள்ளது. [உ]

# சீர்காழிக்கு இசைப்பேரரசர் பட்டம்!

சென்னை, செப். 17

40வது தமிழிசை விழா டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சீர்காழி கோவிந்த ராஜனுக்கு 'இசைப் பேரரசர்' பட்டமளித்துக் கௌரவிக்கப்படவுள்ளார்.

தமிழிசைவிழா சீர்காழி கோவிந்த ராஜனின் தலைமையில் ஆரம்பித்துநடைபெறும்.

இவ்விழாவில் பண்ணிசை மகாநாடு புலவர் கீரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப் படும். உ]

# "20 அம்சத் திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்"

## - பாரதப் பிரதமர்

புதுடில்லி, செப். 17

''20 அம்ச பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் பாரதநாட்டு மக்கள் எல்லோரின் நலனும், சுபிட்சமுமே நோக்கமாகக் கொள்ளப்படுகிறது, எனவே 20 அம்சத்திட்டக்குழுவை பொது மக்கள் இயக்கமாக மாற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் இப்பொருளாதாரத் திட்டத்தின் இலக்குகள் மக்களைச் சென்றடையவும், மக்கள் தமது ஆர்வத்தை காட்டி செயல்படுத்தவும்வழி வகுக்கும். பாரதத்தின் தேசிய வளர்ச்சியும், மக்கள் நல்வாழ்வு நலனும் உள்ளடக்கிய 20அம்ச பொருளாதாரத் திட்டக்குழுவின் செயற்பாட்டில் பாரிய பொறுப்பும் எதிர்காலநலனும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது''

இவ்வாறு புதுடில்லியில் நேற்று நடைபெற்ற 20 அம்சத்திட்டக்குழுவுக்குத்தலைமை தாங்கிய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கருத்துத் தெரிவித்துள்ளார். [உ]

# சூரிய சக்தி நகரம்

மாஸ்கோ. செப், 17

காரகும் பாலைவனத்தில் மேய்ப்பவர்களின் நலனுக்காக ஒரு சூரிய சக்தியைப்பயன்படுத்தும் சிறு நகரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. துர்க்மேனிய விஞ்ஞானிகள் இதற்கு வடிவமைப்புச்செய்தனர்.

இங்கு மின்விசை உற்பத்தி, தண்ணீர் பம்ப், உவர் நீரை நல்ல தண்ணீராக மாற்றும் நிலையம், செயற்கைப் பருவநிலை மூலம் செடிகளை வளர்க்கும் தோட்டம் முதலியவற்றுக்கும் வீடுகளில் குளிர்சாதனம், தண்ணீர் விநியோகம், மின்விசைச் சாதனங்கள் முதலியவற்றிற்கும், சூரியசக்தி பயன்படுத்தப் படுகிறது.

# 'சமாதான நீதிபதி சேவை சாதாரணமக்களுக்கு தேவை'

[மாவிட்டபுரம்]

''சமாதான நீதிபதிகளின் சேவை சாதாரண மக்களுக்கு அவசியம் தேவையாக இருக்கிறது. சமாதான நீதிபதிகளை தேடி அலைந்து திரியாமல் இலகுவாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இந்த நியமனங்கள் அவசியமாகின்றன. குறிப்பிட்ட சமூகத்தினருக்கே சமாதான நீதிபதிப் பட்டம் என்ற நிலை மாறி இன்று சகல சமூகத்தினருக்கும் இப்பட்டம் வழங்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது.''

இவ்வாறு மாவிட்டபுரம் மடத்தடியைச் சேர்ந்த சமூக சேவையாளர் திரு. மு. முத்துலிங்கம் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றதையொட்டி ஊர்மக்கள் அளித்த பாராட்டு விழாவில் பேசிய யாழ். அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரன் கூறினர்.

திரு. வி. வேலுப்பிள்ளை தலைமையில் மடத்தடி வாசிகசாலைக்கருகாமையில் நடந்த இவ்விழாவில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா பேசுகையில் கூறியதாவது: சமாதான நீதிபதிப் பட்டத்தை நாம் மதிப்பான பதவியாக கருதவில்லை ஆனல் உரிமை மறுக்கப்பட்ட மக்கள் பெரும்பான்மைச் சமூகத்திடம் கையேந்தி நிற்காமல் தமது தேவைகளை தாமே நிறைவேற்றிக்கொள்ள இப்பட்டங்களை உரிமை குறைந்த மக்களுக்கும் வழங்க எமது எம். பி. க்கள் சிபார்சு செய்கிறார்கள்.

மற்றும் ஆசிரியர் நா கருணந்த சிவம் உட்படப் பலர் பேசினர்.''

# ''சோவியத்-இந்திய நட்புறவு வலுவடைகிறது''

## இந்திரா கருத்து

புதுடில்லி, செப், 17

''சோவியத்நாடும், பாரதமும் கொண்டுள்ள உறவு நட்பும், அமைதியும் நிலைபெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும். இரு நாடுகளும் நட்பு, அமைதி ஆகிய இரு இலக்குகளை அடைய அரும்பாடுபட்டு வருவதையும் இதனை செயல்படுத்தும் செயல்பாடுகளை ஆற்றிவருவதையும் கடந்த காலங்களில் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் இவற்றினை அடைய சோவியத்தும், பாரதமும் தமது நட்புறவை வலுப்பெறச் செய்து வருகின்றது.''

இவ்வாறு பாரதப்பிரதமர் திருமதி. இந்திராகாந்தி பாரத-சோவியத் நட்புறவு பற்றி கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் இதுபற்றி பிரதமர் இந்திராகாந்தி கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:-

''அமைதி என்பது ஒரு உயர்ந்தலட்சியமாகும். இதனை வரவேற்று நடைமுறைப்படுத்தப்படவேண்டும். ஆனல் இன்று துரதிர்ஷ்டவசமாக அமைதி பின்தள்ளப்பட்டு வருகின்றமை வேதனைக்குரியதாகும்.

''சோவியத் மக்களினதும் பாரதமக்களினதும் நலன்களைப் பேணிவருவதே இவ்விரு நாடுகளுக்குமிடையே உள்ள நட்புறவு. அதேவேளையில் உலக அமைதிக்கும் வரவேற்பு அளித்து அதனை நடைமுறைப்படுத்துவதிலும் இரு நாடுகளும் கூட்டாகத் தமது பங்களிப்பை ஆற்றுகின்றன. அமைதியை நிலைநாட்டுவதில் இரு நாடுகளும் என்றும் பின் நின்றதில்லை''. [உ

# இதற்கும் ஒரு திருத்தச்சட்டம்

சென்னை, செப். 17

தமிழகத்தின் மதுவிலக்குத் திருத்தச்சட்டத்துக்கு மாநில ஆளுநர் தமது ஒப்புதலைஅளித்துள்ளார்.

இத்திருத்தச்சட்ட ஒப்புதல் மூலம் தமிழகத்தில் மது பாவனையாளரின் தகுதி, மது அளவு, பாவிப்புமுறை, இடம் என்பன பற்றி விபரங்களினை உள்ளடக்கியதாக இத் திருத்தச்சட்டம் இடம்பெற்றுள்ளது. [உ]

# நன்கொடை

(சுழிபுரம்)

அருணகிரிநாதர் திருமுருகாற்றுப்படை நூல் வெளியீட்டுக்கு சுதுமலையைச் சேர்ந்த எஸ். செல்லத்துரை 100 ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளார்.

# "விசுவாசம் எமது வாழ்வுடன் இணைந்துள்ளது"

(அரியாலை)

''விசுவாசம் இல்லாமல் எந்தச் சபையும் எந்த ஸ்தாபனங்களும் செயல்பட முடியாது. விசுவாசம் உள்ளவர்களால் எல்லாவற்றையும் செய்யமுடியும். மனிதன் கடவுளிடமிருந்தே விசுவாசத்தைப் பெறுகிறான். கிறிஸ்தவ சபைகள் கடவுளுக்குப் பிரியமானதாகவும், விசுவாசம் உள்ளதாகவும் இருக்கவேண்டும்.''

இவ்வாறு நல்லூர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி முன்னாள் அதிபரும், நவஜீவன நிர்வாகக் குழுவின் தலைவருமான திரு. ஜே. ஜி. அரசரத்தினம் பரந்தன் நவஜீவனத்தில் நடைபெற்ற மோட்ச பிரயாணியின் ஆயத்த ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுவைபவத்தை ஒட்டி இடம்பெற்ற ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது; விசுவாசமும், அவவிசுவாசமும் ஒன்றோடொன்று இணைந்துருக்கிறது. விசுவாசம் எமது ஜீவியத்தோடு இணைந்திருககிறது. கிறிஸ்துவிடமிருந்தே எமக்கு விசுவாசம் வருகிறது. எமது சீவியத்தோடு இறை விசுவாசம் இணைவதால் அது வளர்ச்சியடைந்து நிலைபெறுகிறது. இந்த விசுவாசத்தில் நிலைகாத எந்தச் சபையும், எந்த ஸ்தாபனங்களும் உறுதியாக நிலை பெறமாட்டாது. அருட்திரு யே. யே. இரத்தினராசா அடிகளாரின் ஜெபமும், ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

## ராமநாதன் நினைவுச் சொற்பொழிவு

# பேராசிரியர் சிட்டிபாபு நிகழ்த்துவார்

(யாழ்ப்பாணம்)

சேர் பொன்னம்பலம் ராமநாதன் நினைவுச்சொற்பொழிவினை இம்முறை அண்ணாமலை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வி. சிட்டிபாபு நிகழ்த்தவுள்ளார். இம் மாதம் 27, 28-ம் திகதிகளில் மாலை 5மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் மண்டபத்தில் இந்த சொற்பொழிவு இடம் பெறும். முதல் நாள் உரையை ஆங்கிலத்தில் அடுத்தநாள் தமிழில்பேராசிரியர் சிட்டிபாபு நிகழ்த்துவார்.

பேராசிரியர் சிட்டிபாபு பல இந்திய சர்வதேசிய கல்விநிலையங்களில் உறுப்பினராகவுள்ளார். பலநாடுகளில் பயணம் செய்துள்ள இவர் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

# கூட்டுறவுத் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுத் தினவிழா நேற்று ஆரம்பமானது. விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 18ம் திகதி வரை நடைபெறவுள்ளது. தேசிய கூட்டுறவுச் சபை யாழ். மாவட்டக் குழுத்தலைவரும், கோப்பாய் எம். பி. யுமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் இவ் விழா நடைபெறவுள்ளது. (மா)

# சோவியத் விஞ்ஞானிகளின் 'ஒத்துழைப்புக்கு இந்திய விஞ்ஞானிகள் பாராட்டு!

பெங்களூர், செப். 17

''அமைதியான நோக்கங்களுக்காகச் சோவியத்தின் ஒத்துழைப்புடன் விண்வெளியை ஆராய்வதால், இந்தியாவுக்குப் பெரும்பயன் ஏற்பட்டுள்ளது; பருவமழை ஆராய்ச்சி, தகவல் போக்குவரத்து முதலியதுறைகள், இதற்குச் சான்றாகும். செயற்கைக் கோள்களின் உதவியுடன் இந்தியாவின் தொலைதூரப் பகுதிகள் மற்றும் எட்ட இயலாப் பகுதிகளுடன் நாங்கள் தொடர்புகொள்ள முடிந்தது ''

இவ்வாறு இந்திய விஞ்ஞானக் கழகத்தின் பிரதிநிதியும், விண்வெளி ஆராய்ச்சியில் பிரபல நிபுணருமான டாக்டர் டி. நஞ்சுண்டராவ் கூறியுள்ளார். இந்தியவிஞ்ஞானிகளுக்கு, விஞ்ஞானத்துறையில் சோவியத் விஞ்ஞானிகள் ஒத்துழைப்பு வழங்குவதைப் பாராட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனை அவர் கூறினார்.

இந்த அறிக்கையில் பிரபல இந்திய விஞ்ஞானியும், இந்திய விஞ்ஞானக் கழக இயக்குனருமான டாக்டர் எஸ். ராமசேஷன் தெரிவித்துள்ள கருத்தில், சோவியத்-இந்திய விஞ்ஞான ஒத்துழைப்பு புதிய துறைகளுக்கு விரிவடைந்து வெற்றிகரமாக வளர்ந்துவருவது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். சோவியத் விஞ்ஞானிகள் தமது கண்டுபிடிப்புக்களை எப்போதும் மனம் உவந்து எங்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். இருநாடுகளின் விஞ்ஞானிகளுக்கிடையே வெற்றிகரமாக வளர்ந்துவரும் ஒத்துழைப்பு மிகப்பரந்ததுறைகளைத் தழுவியுள்ளது. என்று தெரிவித்துள்ளார். (கி)

## மணிவாக்கு

எண்ணத்தின் உயர்வுக்கு ஏற்பத் தொடுத்த கருமம் நன்கு நிறைவேறப் பெறுகிறது.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## நகைப்பித்து

கொள்ளை, களவு, வழிப்பறி,கடத்தல்போன்ற தீமைகள் மலிவதற்கு ஏதுவான இரு பொருட்கள்— தங்கநகையும் இரத்தினக் கல்லும்,

வங்கியிலோ, அல்லது வீட்டிலோ கொள்ளையடிக்கப்படும் நகைகளின் விலை இன்று இலகுவில் மதிக்கப்பட முடியாது.

நாட்டில் நகர் மத்தியில் பட்டப்பகலில் தங்கநகைகள், தங்கச்சங்கிலி, தாலிக்கொடி போன்ற விலையுயர்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்படுவது இங்கு குறைந்ததாகவில்லை,

அப்படி அது குறைந்தால் பெண்கள் இவ்விதபொருட்களை—தாலிக்கொடிஉட்பட—வெளியில் அணிந்து போகாததே ஒரு முக்கிய காரணமெனலாம்.

நகைகளை வீட்டிலோ அல்லது வங்கியிலோ வைத்திருப்பதும் ஆபத்தாகி விடுகிறது; அது அவ்வாறாகபெண்கள் நகைகளில் கொள்ளும் மோகம் எப்போதாவது குறையுமாவென்று கேட்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது.

கொலையும் கொள்ளையும் மட்டுக்குமிஞ்சி அதிகரித்திருக்கும் இக்காலத்தில் இந்த அடிப்படைக்கேள்வி அர்த்தமற்றதென்றுகூறமுடியாது.

பாதுகாப்பற்ற பெண் ஒருத்தி தான் அரை லட்சம் ரூபாவை கால்நடையில் ரகசியமாகக்கொண்டுபோவதற்கியைவதில்லை. அப்படியாயின், தன் உடம்பில் இத்தொகையை நகைரூபத்தில் விளம்பரம் செய்து போவதெங்ஙனம்?

பெண்ணுக்கு அணிகலம் ஆபரணம்—சுத்த தங்க ஆபரணம் என்ற பண்புடைய மரபு இக் காலத்திலும் பேணப்படுவது – குறிப்பாக தமிழ்மக்கள் மத்தியில்– இந்த மரபு புனிதமானதென்பதை விளக்குகின்றது.

''தாலியில்லாமல் ஒரு சுமங்கலி வெளியே போகலாமா? இது ஒரு பழைய பண்பாட்டில் தொடர்ந்து வரும் வலிமையை உணர்த்தும் கேள்வி.

ஆயினும் நகைக்கு மட்டுமல்ல உயிருக்குமே ஆபத்தென்றால் அதற்கும் அஞ்சாதவர்கள் நகைப்பித்துப்பிடித்தவர்களே! நகைப்புக்குரியவர்களே!

நகைப்பித்து பற்றி ஒரு சுவையான கதை மகாத்மா காந்தியோடு தொடர்புடையது.

ஒருமுறை இந்திய வைசிராய் பிரசன்னமான கூட்டத்தில் மகாத்மாகாந்தி பேசநேரிட்டது. அவரின் தோற்றம் அங்கு சுற்றிலும் இருந்த பொன்னும் மணியுமாக ஒளியுமிழ்ந்து விளங்கின பெண்களுக்கு முழுமாறாயிருந்தது.

பேச்சாளர்கள் எல்லோரும் இந்தியாவின் வறுமையைப் போக்க வேண்டுமென்று பேசினார்கள். அண்ணல் காந்தி பேசியபோது, ''இந்த அணிகலன்கள் எல்லாம்மக்களின்பொதுச்செல்வம் என்று உணர்ந்தால் அல்லாமல் இந்தியா முன்னேற வழியில்லை'' என்றார். கூட்டம் முடிவில் அன்று சேர்ந்தநிதி கணக்கிடமுடியவில்லையாம்.

காந்தியால் இந்தஆபத்து நேரிடுமென்றுணர்ந்த செல்வக் குடும்பத்துப் பெண்கள் பலர் அவரின் கூட்டங்களுக்கு, நகைகளைக் கழற்றிப் பூட்டி வைத்து எளிய கோலத்துடன் சென்றார்கள் என்பது வரலாறு.

மாபெரும் அஹிம்சா மூர்த்தி மகாத்மாகாந்தியை பெருந்திருடனென்று அஞ்சிய பெண்குலம் இன்று சுழல் துப்பாக்கி தாங்கிய கொலைக்காரருக்கு அஞ்சத் தயங்குவதேன்?

நகைப்பித்து ஒரு அடிப்படை ஆசை; அது பல இனத்தவர், மதத்தவர் மத்தியிலும் காணப்படுகின்றது; ஆடம்பரவாழ்க்கைக்கு அவசியமானது; நகைக்கடை முதலாளிகள், இரத்தினக் கல் வியாபாரிகள் சமூகத்திலே பெரும்புள்ளிகளாகக் கருதப்படுவதும், ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருப்பதும் இந்தப்பித்தின்விளைவு.

மனமாற்றம் ஏற்பட்டால், ஆடம்பர வேட்கை, உலகம் மதிக்க வேண்டுமென்ற ஆசை குறைந்தால் கொள்ளையும் குறையும்.

## சமத்துவ சந்தர்ப்பம்

தனிக்குதிரை என்று பேரம் பேசிய இடத்தில் இன்று பல குதிரைகள் பந்தயத்துக்குத் தயாராகின்றன. நாம்முன்னொருமுறை ஜனாதிபதித்தேர்தலை ஒரு 'மைல்' ஓட்டத்துக்கு ஒப்பிட்டுக் குறிப்பிட்ட நினைவு உண்டு.

போட்டியில் இறங்கின ஒவ்வொருவரும் தாமே இலங்கையின் அடுத்த ஜனாதிபதியென்று நம்பிக்கை கொள்வதைப் பெருந்தொகை கட்டுப்பணமே தடுக்க முடியாது.

ஜனநாயக ஆட்சியில் தகைமையுள்ள எவரும் போட்டியிட உரிமைஉண்டு. இந்த அடிப்படை உரிமையைவிட நாம் குறிப்பிடுவது பிரசார உரிமையையே! இன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு பிரசார வசதிகள் கடந்த ஐந்தாண்டுகளாக மிதமிஞ்சிக் கிடைத்துள்ளன. நாட்டின் நல்லாட்சியில் நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரையும் அடிக்கடி நினைவூட்டும் வாய்ப்பு அவருக்கு இருந்து வந்திருக்கிறது.

இன்று தொடக்கம் மற்றைய வேட்பாளர்களுக்கும் அரசின் பொதுசன தொடர்பு சாதனங்கள் அனைத்திலும் பிரசாரஞ் செய்ய போதிய வசதிகள் அளிப்பது அரசின் கடமை; வேட்பாளர்களின் உரிமை

மக்கள் ஆட்சி நன்றாக மலர்ந்த நாடுகளில் இவ்வசதி சாதாரண காலத்திலேயே உண்டு. அரசின் போக்குகளைப் பொறுப்புடன் கண்டிக்கும் உரிமை எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு உண்டு.

இந்த அடிப்படை உரிமை சிலவேளையில் ஆளுங்கட்சிக்கு சாதகமாகவிருப்பதை அரசு உணர்வதில்லை. வெறும் புளுகிலும் பிரசாரத்திலும் தீவிரமாக ஈடுபடும் அரசு சார்பான பத்திரிகை, வானொலி மக்களை காதைப் புளிக்கவைப்பதில் பயன் இல்லை.

போட்டியாளர்கள் தங்கள் உள்ளக்கிடக்கைகளைத் தாராளமாக விளக்கினால். வாக்காளர்கள் முடிவு செய்வது இலகுவாகும். வெல்லும் சாத்தியமுள்ள ஆளுங்கட்சி இதற்குத் தயங்க வேண்டியதில்லை.

## மேசன், தச்சுத் தொழிற்பயிற்சி

# உலக வங்கி உதவியுடன்

## தொழில் நுட்பக் கல்லூரி வழங்கும்

[யாழ்ப்பாணம்]

மேசன் வேலை, தச்சுவேலை போன்ற தொழில்துலைகளில் உலகவங்கியின் உதவியுடன் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சியளிக்கப்படுகின்றது.

உலகவங்கியின் உதவியுடன் உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சும் தேசிய தொழில்நுட்ப சபையும் சேர்ந்து இந்த பயிற்சி நெறிகளுக்கு ஒழுங்குசெய்துள்ளனர். தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டரை மாதமும் வேலைத்தலங்களில் பத்துமாதமும் இந்தப்பயிற்சியளிக்கப்படும். கல்லூரி பயிற்சியின்போது பயிற்யாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 12 ரூபாவும் பின்னர் வேலைத்தள பயிற்சியின்போது நாளாந்த வேதனமாக 15 ரூபாவும் உலகவங்கி வழங்கவிருக்கின்றது.

பயிற்சியாளர்களின் திறமையைப் பொறுத்துமேலதிகவேதனமும் அளிக்கப்படும். மேலும் பயிற்சி முடிந்து வெளியேறும் போது ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்களும் உலக வங்கியின் ஆதரவில் வழங்கப்படவிருக்கின்றது.

இப் பயிற்சிநெறியில் சேரவிரும்புகிற வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் யாழ். பல்தொழில் நுட்பக் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

''கிராமங்களில்

## சுயதொழில் மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்''

### — நல்லூர் எம். பி.

(கோண்டாவில்)

''எல்லோருக்கும் அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து இருந்தால் அது எமது எதிர்கால சந்ததியினரை ஒரு விரக்தியுற்ற சமுதாயமாகவே உருவாக்கமுடியும். இந்நிலை எத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று கூறமுடியாது இந்நிலையில் கிராமிய மட்டங்களில் சுய தொழில் மூலம் வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இது கூடிய நன்மையை எம்மவர்களுக்கு ஏற்படுத்தும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் நல்லூர்த் தொகுதியில் கிராமிய மட்டத்தில் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்துவது சம்பந்தமான கருத்தரங்கொன்று யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை கொக்குவில் உப பணியகத்தில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றபோது உரையாற்றுகையில் கூறினார்.

இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசியபோது கூறியதாவது:

''ஏட்டுக்கல்வியின் மூலம் பயனைப் பெற முடியாது. மேலைத்தேசங்களில் பல் கலைக்கழக ஏட்டுப்படிப்பிலும் பார்க்க தொழில் நுட்பக்கல்லூரிகளில் செய்கை முறை மூலம் பயிபிற்சி பெற்று வருகின்றவர்களுக்கே கூடியளவில் முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றன. இந்நிலையில் நாமும் சிறு தொழிற்சாலைகளில் எம் இளைஞர்கள் யுவதிகளுக்கு பயிற்சி அளிக்கவேண்டும். இது சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

''எமது நாட்டின் கல்வித் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆங்கிலேயர் நடைமுறைப்படுத்திய கல்வித்திட்டமே காணப்படுகின்றது. கிராமிய மட்டத்தில் இருக்கின்ற ஒவ்வொரு தொழில் அதிபர்களும் இம்முயற்சியில் தமது பங்கை அளிப்பதுடன் ஒத்துழைக்கவும் வேண்டும்.

''தேசிய தொழில் பயிற்சி சபையின்கீழ் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு 300 ரூபா உதவிப்பணம வழங்கப்படுகின்றது. இதனைக்கொண்டு கொழும்பு போன்ற இடங்களில் பயிற்சி பெற முடியாது. இத்துடன் கொழும்பில் பயிற்சிக்குச் செல்லும் மாணவர்கள் மொழிப்பிரச்னை காரணமாக இடையில் திரும்பவேண்டிய சூழ்நிலைக்கும் உள்ளாகிறார்கள். ஆகையினால் இத்தகைய பயிற்சி நெறியை கிராமியமட்டத்தில்எந்தவகையான அரசியல் கலப்புமின்றி அன்பு முறையில் நடத்துவது நன்மையாகும். எந்த ஒரு நல்ல விடயத்திற்கும் நாம் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும்'' என்றார்.

இக்கருத்தரங்கில் நல்லூர் தொகுதி அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் திரு. பாலேந்திரா, தொழிற்பயிற்சி சேவை வெளிக்கள அதிகாரி திரு. மகேஸ்வரநாதன். உப பணியக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சிவபாதம், கிராமசேவை அலுவலர்கள், விசேட சேவை உத்தியோகத்தர்கள், தொழில் அதிபர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வெ)

## மாவட்ட அபிவிருத்தியும் மகாதேவா தாம்போதியும்

### மக்கள் கருத்து

கடந்த 15-9-82-ல் யாழ். மாவட்டசபைக் கூட்டம் பற்றியும், அங்கு நடைபெற்ற தாம்போதி பற்றிய விவாதத்தையும் 16-9-82-ம் திகதிய ஈழநாடு பத்திரிகை படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. பத்திரிகைச் செய்தியை வாசித்ததும் எனது மனதில் எழுந்த சில கருத்துக்களை பத்திரிகையின் கவனத்திற்குத் தருகிறேன்.

யாழ். மாவட்ட அபிவிருத்தியின் இன்றைய கதாநாயகனாகத் திகழ்கின்றது மகாதேவா தாம்போதி. இப்பாலம் பரிபூரணப் படுத்தப்படுமாயின் யாழ். மாவட்ட அபிவிருத்தியே அரைரொசி நிறைவேறியதற்குச் சமனாகும் பிரயாண அசௌகரியங்களால் அல்லோல கல்லோலப்பட்டு வரும் தமிழ் மக்களுக்கு இப்பாலம் ஓர் கேந்திரந் தளமாகும். அது மட்டுமன்றி யாழ். மாவட்ட அபிவிருத்திக்கே இது ஓர் ஊன்றுகோலாகும். இதனால் மக்கள் அடையப் போகும் நன்மைகள் ஒன்று இரண்டாக இருந்தால் எண்ணில் அடங்கும். எண்ணிலடங்காத நன்மை பயக்கக் கூடிய பாலத்தைப்பற்றி மக்கள் யாவரும் உணர்வர். ஆண்டாண்டு காலமாக பாராளுமன்ற ஆரம்பம் தொடக்கம் இற்றைவரை பாராளுமன்றத்தில் பாடசாலை, மின்சாரம், குடிநீர் என்று பேசி வந்த பிரதிநிதிகள் தாம்போதியும் ஒரு முக்கியம் என்றுணர்ந்தும் பழைய பிரச்சினைகளை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைத்தாலும் தாம்போதியை நிறைவேற்றுதல் நல்லது. இயந்திரப்படகு, இயந்திரப்பாதை இவற்றால் நாள் தோறும் அவதிப்படும் மக்களுக்கு தாம்போதி கைகொடுக்காதா. இதனால் பூநகரி, முழங்காவில், பல்லவராயன் கட்டு முதலான குடியேற்றத் திட்டங்கள் முன்னேற வாய்ப்பில்லையா? இருக்க நிலமின்றி வாழும் மக்கள் அங்குசென்று குடியேற மாட்டார்களா? தமிழ் மண்ணைக் காருங்கள், குடியேறுங்கள் என்று கூறிவிட்டு தாம்போதியை நிறைவேற்றாமல் விடுவது நல்லதா? காலம் தாழ்ந்து போவது முறையா? இன்றைய காலகட்டத்தில் யாழ். மக்களுக்கு மட்டுமல்ல, மன்னார் மக்களுக்கு இது ஓர் முக்கிய பாலமாகும். இதை எதுவித தாமதமுமின்றி யாழ். அபிவிருத்திச் சபை இதை நிறைவேற்றுவதுதான் மக்களுக்குச் செய்யும் மகோன்னத தொண்டு. இப்பாதையில் முக்கியத்துவம் எத்துணை என்றும், ஆண்டுக்கணக்காக எத்தனை லடசோபலட்சம் மக்கள் இதன் வழியாகப் பிரயாணம் செய்கின்றார்கள் என்றும், பாடல்பெற்ற கேதீச்சரத்தானைத் தொழும் கோடிக்கணக்கான அடியார்களுக்கும், மடு யாத்திரிகருக்கும் இப்பாலம் செய்யும் நன்மையையும் மனதில் கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த ஆதரவை நல்கி இவ்அபிவிருத்தி நிறைவேற்றப் படுதலையே யாவரும் விரும்புவார்கள்.

க.கனகராசா ஜே. பி.
யாழ்ப்பாணம்.

## பரிசளிப்பு விழா

(மட்டுவில்)

சாவகச்சேரி இயல், இசை, நாடக அரங்கின் பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார்.

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# "எனக்கு வழங்கும் வரவேற்புகளைவிட வாக்குகளே பிரயோசனமானவை"

### - ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

"எனக்கு நீங்கள் வழங்கும் வாக்குகளையே நான் எதிர்பார்க்கிறேன் இதைவிடுத்து பலத்தசரகோஷத்துடன் வரவேற்பதும், எனது கரங்களை முத்தமிடுவதும், 'ஜயவேவா' என்று குரலெழுப்புவதும் எனக்குவாக்களிக்காத பட்சத்தில் பிரயோசனமற்றவையாகிவிடும்."

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன குளியாப்பிட்டியவில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் அங்கு பேசியதாவது திரு. ஹெக்டர்கொப்பேகடுவ தாம்ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை வழங்குவேன் என்று கூறிவருகிறார். ஆனால் அவர் இவ்வாறு உரிமைகளை திருமதி பண்டாரநாயக்காவுக்கு வழங்குவார் என்றுநான் நினைக்கவில்லை. இதற்குப்பதிலாக அவர் தமது பதவிக்காலத்தை மேலும் நீடிப்பார் என்றே எதிர்பார்க்கிறேன்.

என்னை எதிர்க்கட்சியினர் பலவாறாக தூஷித்து வருகின்றனர் ஆனால் இவற்றையெல்லாம் நான் பெரிதுபடுத்துவதில்லை ஏனெனில் இவ்வாறு அவர்கள் தூஷிப்பதெல்லாம் வாத்தின் மீது தண்ணீர ஊற்றுவது போலாகும்.

கடந்த ஸ்ரீ ல. சு. கட்சி ஆட்சியில் தாம் அனுபவித்த கஷ்டங்களை விபரித்த ஜனாதிபதி, 1970லிருந்து 77 வரை ஐ. தே. க. விற்கு கூட்டங்களை நடத்துவதில் தடைகள் இருந்தனவென்றும், தற்போதைய யாழ்ப்பாண மாவட்டஅமைச்சர் திரு. யு.பி. விஜயக்கோன் கைது செய்யப்பட்டாரென்றும் தெரிவித்ததோடு இன்று இத்தகைய சூழ்நிலைகள்இல்லையென்றும், அரசாங்கத்தை எதிர்ப்பவர்களுக்குக்கூட சொற்பொழிவு நிகழ்த்தவும், சுதந்திரமாக நடமாடவும் உரிமை உண்டென்றும் கூறினார். (இ)

# 'ஜே. ஆரைத் தோற்கடிக்கும் சக்தி சிறிமாவுக்கே உண்டு'

### ஆனால் பிரசாரம் செய்ய முடியாமலும் போட்டியிட முடியாமலும் அவர் இருக்கிறார்

-அநுரா

(கொழும்பு)

"ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை தோற்கடிக்கும் சக்தி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவிடமே உண்டு. ஆனால் அவர் தேர்தல்களில் போட்டியிடும் உரிமையும், பிரசார மேடைகளில் ஏறிப் பேசும் உரிமையும் பறிக்கப்பட்டநிலையில் இருந்துவருகிறார்".

இவ்வாறுநுரெலியா, மஸ்கெலியா இரண்டாவது எம். பி.யான திரு. அனுராபண்டாரநாயக்கா முல்கிரிகல தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"ஜனாதிபதி ஜே. ஆர். மீண்டும் பதவிக்குவந்தால்பொதுத் தேர்தலை மேலும் ஆறுவருடங்களுக்கு ஒத்திப்போடுவார்.

ஐ. தே. க. பதவிக்கு வந்த ஐந்துவருட காலங்களிலேயே வாழ்க்கைச்செலவு பெருமளவு தூரம் உயர்ந்துள்ள தென்றால் எதிர்காலத்தில் நிலைமை எப்படியிருக்கும்?

திரு. ஜெயவர்த்தன மக்களுக்குபல நம்பிக்கைகளைக் கொடுத்து 1977ல் பதவிக்கு வந்தார் ஞல் இன்று அவர் கொடுத்தவையெல்லாம் பொய்யானவையென்று மக்கள் உணர்ந்துள்ளனர்" என்றார். (கி)

# 'ரேகண இந்தநாட்டு மண்ணை நூறுயிரம் தடவைகள் முத்தமிட வேண்டும்'

### - காமினி

(அவிசாவெல)

"1970ம்ஆண்டுஇளைஞர்கள், யுவதிகள் பலரை தவறுதலாக வழிநடத்தி அவர்களைப் பலியாக்கிய பாவத்திலிருந்தும் திரு. ரேகண விஜேவீரா மீள வேண்டுமானல் நூறுயிரம் தடவைகள் அவர் இந்த நாட்டுமண்ணை முத்தமிட வேண்டும்."

இவ்வாறு காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரான திரு. காமினி திசநாயக்கா அவிசாவெலயில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார், அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது;- ஜனாதிபதி ஜயவர்த்தனவினால்தான் இன்று ரேகண விஜேவீரா போன்றவர்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். இல்லாவிடில் அவர்கள் இன்றும் இரும்புக்கதவுகளுக்குப் பின்னால் இருட்டறைகளுக்குள் இருப்பார்கள்.

ஜனாதிபதித்தேர்தலில் இறங்கியிருக்கும் ஜனாதிபதி ஜே.ஆர். இலங்கை அரசியலில் பல்வேறு பதவிகளை வகுத்துள்ளார். இவரது அரசியல் அனுபவம் 40 வருடங்களுக்கு மேற்பட்டதாகும்.

ஸ்ரீ. ல. சு. கட்சி வேட்பாளரான திரு. கொப்பேகடுவ கடந்த ஆட்சிக்காலத்தில் கடைகளுக்கு முன்னால் கியூ வரிசைகளும், பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளும் ஏற்படக் காரணமாக இருந்தவர். மக்கள் இவற்றைஇன்னும் மறந்துவிடவில்லை.

எனவே பொதுமக்கள் இத் தேர்தலில் நன்கு சிந்தித்து தமதுவாக்குகளை ஐ. தே. கவுக்கு போடவேண்டும்.

ஏனைய ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களான திரு. கலாநிதி கொல்வின் ஆர் டி. சில்வா, திரு. கீர்த்திரத்ன, முதியான்சே தென்னக்கோன் ஆகியோரின் போட்டியை நாம் பெரிது படுத்தவில்லை. ஏனெனில் இவர்கள் தமது கட்டுப் பணங்களைக் கூட மீளப்பெற மாட்டார்கள்" என்றார். (கி)

# சைவவிருத்திச்சங்க வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

வடகோவை ஞானபண்டித சைவ விருத்திச் சங்க வெள்ளி விழாவை இன்று சனிக்கிழமை சங்கத்தின் கலாசார மண்டபத்தில் கொண்டாடப் படவுள்ளது

சங்கத்தின் தலைவர் திரு. சீ. க. சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன், பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள், கோப்பாய் எம்.பி. திரு. ஆ.மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோவில் தேவஸ்தான பிரதம குரு சித்தாந்த பானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களுக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சு. இராசேந்திரக்குருக்கள் பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. (மா)

# "தேசிய தொழிற்பயிற்சியாளர் ஒழுங்காகப் பயின்று தேர்ச்சியடைய வேண்டும்"

(மண்டைதீவு)

"யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு தேசிய தொழிற்பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களில் கணிசமான தொகையினர் எனது தொகுதியைச்சேர்ந்தவர்கள். ஆகவே தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் பயிற்சி காலங்களில் ஒழுங்காக பயிற்சிபெற்று தேர்ச்சியடைய வேண்டும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை தொகுதியில் தேசியதொழிற் பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கும் வைபவம் வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றபோது காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கு மாதம் 300 ரூபா வழங்கப்படவிருக்கின்றது இதைச் சம்பளமாக நீங்கள் கருதக்கூடாது இதை நீங்கள் சிறந்த தொழிற்பயிற்சியாளராக வருவதற்கு ஊக்குவிப்புப் பணமாக அரசுகொடுத்து உதவுகின்றது.

"தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வடபகுதியிலுள்ள பதினெட்டு தனியார்தொழிற் சாலைகளில் பயிற்சிபெறுவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. ஆகவே பயிற்சியாளர்கள் தொழிற்சாலை அதிபர்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களது ஸ்தாபனத்தின் ஒழுங்கு விதிகளை கடைப்பிடித்து தங்கள் பயிற்சிகளை பெறவேண்டும். அவர்களது வெறுப்புக்கு பயிற்சியாளர்கள் ஒருபோதும் மாறக்கூடாது" என்றார்.

தேசிய தொழிற்பயிற்சிச் சபையின் இணைப்பு அதிகாரி திரு. யு. வணசிங்காவும் உரையாற்றினர். (வெ)

## யோகர், மகாதேவா சுவாமிகள்

# "இந்துமத வளர்ச்சிக்கு ஆற்றிய பெருந்தொண்டு"

(கிளிநொச்சி)

யோகர் மகாதேவா சுவாமிகள் போன்றோர் யாழ்ப்பாணத்தில் இந்து மத வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றி உள்ளார்கள். இவர்களின் முயற்சியாலே சைவம் தழைத்தோங்கியது என்று கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவா ஆச்சிரம வெள்ளிவிழாவின் மாலை நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன் குறிப்பிட்டார்.

திரு. ஞானச்சந்திரன் மேலும் பேசுகையில்:-

உலகில் உள்ள மார்க்கங்களில் பத்தி மார்க்கம் மிகவும் உன்னத இடத்தை பெறுகிறது. குருபக்தி போற்றுதற்குரியது. ஒழுக்கம், பண்புபேணி சமய வாழ்வில் ஈடுபடுவது மகிழ்ச்சியை தரும். இருபத்தைந்து ஆண்டுகளாக சமயப் பணியாற்றும் மகாதேவா ஆச்சிரம நிர்வாகி வடிவேல் சுவாமியின் சேவை போற்றுதற்குரியது என்றார்.

திரு. வே. பரமநாதன், புலவர். குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினர்கள்.

பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா அவர்களால் தேவார பாராயணமும் நிகழ்த்தப் பட்டது.

# பாரதி நூற்றாண்டுவிழா

[மட்டுவில்]

மட்டுவில் சோமஸ்கந்தா சனசமூக நிலையம் பாரதி நூற்றுண்டுவிழாவை நாளை கொண்டாடுகிறது.

இந்த விழாவில் பாரதி பற்றிய ஆய்வரங்கு, பட்டி மன்றம், கவியரங்கு, ஆகிய அம்சங்களும், பாரதி சிந்தனைகள், பாரதிபாடல்கள், நடனங்களும் இடம் பெறும். (க-வெ)

உத்தரவாதத்துடன் சென்னை-ரூபவாகினி ஏரியல் பொருத்திக் கொள்ளவும்
மற்றும் உங்கள் வீட்டு மங்களவைபவங்களை
வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும்
வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில் யாழ்ப்பாணம்.

## "ஊர்காவற்றுறை தொகுதி அபிவிருத்தி பணம் பூரணமாகச் செலவிடப்படவில்லை"

### பண்டிதர் குற்றம் சுமத்துகிருர்

(மண்டைதீவு)

"யாழ். மாவட்டத்தில் பின் தங்கிய தொகுதிகளில் ஊர்காவற்றுறை தொகுதியும் ஒன்ருகும். இத்தொகுதியின் அபிவிருத்திக்கு கடந்த ஆண்டுகளிலும் 1982ம் ஆண்டும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இதுவரை பூரணமாக செலவிடப்படவில்லை இதனுல் பல அபிவிருத்தி வேலைகள் செயல்படாமல் இருக்கின்றன. இதையிட்டு நான் கவலைப்படுகின்றேன்."

இவ்வாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் தொகுதி அபிவிருத்தி தொடர்பாக அரசாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கொண்ட மகாநாடு நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தொகுதி அபிவிருத்தி வேலைகளை கவனிக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களின் கவலையீனத்தாலும், அக்கறையில்லாத மனப்பாங்கினுலும் அபிவிருத்தி வேலைகள் தேங்கிக்கிடக்கின்றன. அவர்கள் எனது தொகுதிக்குட்பட்ட கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளில் கவனம்செலுத்தி தங்கள் கடமைகளைவெகுவிரைவாக செய்ய முன்வரவேண்டும்.

"மாவட்ட அபிவிருத்தி சபையின் எனது தொகுதி உப பணிமனைகளில் ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்யும் ஒப்பந்தக்காரர்கள் வேலைகளை குறிப்பிட்ட காலத்தில் முடிக்காது காலத்தைப் போக்கிக் கொண்டு இருக்கின்ருர்கள். அவர்களிடம் இதுபற்றிக்கேட்டபோது தாங்கள் வேலைகளைச் செய்து முடித்தாலும் பணத்தை விரைவாகப் பெற முடியாமல் இருக்கின்றது.

"இதனுல் வேலைகளை விரைவாக முடிக்கமுடியாமல் இருக்கின்றது என்று காரணம் கூறுகின்ருர்கள். ஆகவே இதில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு பணத்தை விரைவாக பெற்றுக்கொடுக்க முயலவேண்டும்.

"ஒப்பந்தக்காரர்கள் வேலைகளை செய்துமுடிக்கத் தயங்கினுல் அவர்களது ஒப்பந்தங்களை ரத்துச்செய்யவேண்டும். எனது தொகுதி அபிவிருத்திவேலைகளில் நான் அதிக கவனம் செலுத்தி வருகின்றேன். எனது தொகுதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் பணம் போதாதநிலையில் இருக்கும் நேரத்தில் ஒதுக்கிய பணத்தை செயல்படுத்தாமல் இருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்" என்ருர்.

இம்மகாநாட்டில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாலிங்கம், யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் யாழ் மாவட்ட அபிவிருத்திசபையின் பிரதிச் செயலாளரும் உள்ளுராட்சி உதவி ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட்டும், யாழ். செயலக இணைப்பதிகாரி எஸ். பாலசிங்கம் ஆகியோர்கள் உட்பட யாழ் அபிவிருத்திசபையின் தீவுப்பகுதி உப பணிமனைகளின் நிர்வாக அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். (வெ)

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

(மானிப்பாய்)

நவாலி முருகானந்த சனசமூகநிலைய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: கே. எஸ். முத்துலிங்கம், செயலாளர்: மு.யோகேஸ்வரன், பொருளாளர்: க.ஜெகதீஸ்வரன், கலைக்குழுத்தலைவர்: ந. மணிவண்ணன், விளையாட்டுக்குழுத்தலைவர்: சி சிவனேஸ்வரன், கணக்குப்பரிசோதகர்: இரா. சிவனேசகாந்தன் நிலையப்பொறுப்பாளர்: சி. பரமேஸ்வரன், உபதலைவர் செ. மகேந்திரம், உபசெயலாளர்: செ. சிவபாதம், உறுப்பினர்கள் 7 பேர்.

## ஆராதனையும் அன்னதானமும்

(மட்டுவில்)

ஜனுதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனுவின் 76 வது பிறந்த தினத்தையொட்டி, வடபிராந்திய போக்குவரத்து சபை, விசேட ஆலய ஆராதனைகளையும் நடத்தி ஏழைகளுக்கு அன்னதானமும் வழங்கியது.

கைதடி சைவச்சிறுவர் இல்லத்திலுள்ள இல்லச் சிறுர்களுக்கும், பண்ணையிலுள்ள அனுதைகள் இல்லத்திற்கும் கைதடி இரட்சணிய சேனையிலுள்ள அனுதைகளுக்கும் வடபிராந்திய போக்குவரத்து சபை உணவு பார்சல்களை வழங்கியது.

(க-வெ)

## "சனசமூக நிலையங்கள் கிராம மக்களின் வாழ்வை சிறக்கச் செய்ய வேண்டும்"

[சுழிபுரம்]

"கிராமமக்களின் வாழ்வை சிறக்கச்செய்யும் பணியில் சனசமூக நிலையங்கள் தொண்டாற்றவேண்டும் எமதுதமிழ் இளைஞர்களுக்கு இன்று வேண்டியது அறிவும், திறமையுமாகும் மூளை வளத்தைக்கொண்டு வாழ அறிவுவேண்டும். தமிழினம் சுதந்திரம் அடையதியாகம், திறமை வேண்டும். இவற்றை ஊட்டுவது இங்குள்ள சனசமூக நிலையங்களின் முக்கிய கடமையாக விளங்க வேண்டும். இன்று இங்கு திறக்கப்பட்டுள்ள சனசமூகநிலையம் இப்பகுதிமக்களின் பல்வகைத் தேவைகளை நிறைவு செய்ய ஒளி விளக்காக மிளிரவேண்டும்.

இவ்வாறு சுழிபுரம் கல்லவேம்படிகலைவாணி சனசமூக நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம் குறிப்பிட்டார்.

விழாவிற்கு செல்வன் சு. சிவலிங்கம் தலைமைவகித்தார். மறைந்த வட்டுக்கோட்டை எம். பி திருநாவுக்கரசுவுக்கு இருநிமிடமௌனஞ்சலி செலுத்தப்பட்டது

சுழிபுரம் மேற்கு கிராமோதயசபைத் தலைவர் திரு மு. சம்பியையா, திரு. க. வாமதேவன், சுழிபுரம் கிழக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு மு.சிவராசா, வைத்தியர் எஸ். தாமோதரம்பிள்ளை, வைத்தியர் பூ. கயிலாயநாதன் திரு.மு.குணபாலசிங்கம், திரு. சா. அரிச்சந்திரா ஆசிரியர் எஸ் குமாரவேலு உட்பட பலர் உரையாற்றினர். [வெ]

## மயிலிட்டி கொலை: இருசந்தேகநபரும் தொடர்ந்து றிமாண்டில்!

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கொலைகுறித்து சந்தேக நபர்கள் இருவரும் இம்மாதம் 27ம் திகதிவரை தொடர்ந்துறிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மயிலிட்டியைச்சேர்ந்த சீனியர் துரைசாமி 44 வயது) என்னும் விவசாயி மயிட்டி-கட்டுவன் வீதியில் வைத்து கோரமாக வெட்டப்பட்டும், தாக்கப்பட்டும் கொலையுண்டது தொடர்பாக காங்கேசன் துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா பாலசிங்கம், இளையகுட்டி சதிரமலை ஆகிய இரு சந்தேக நபர்கள் ஏற்கனவே றிமாண்டில் வைக்கைக்கப்படிருந்தனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இம்மாதம் 27ம் திகதிவரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (க)

## நாவற்குழி விபத்துமரண வழக்கு: "இறந்தவரை சிலர் வானில் ஏற்றினர்"

(சாவகச்சேரி)

"காலமான செல்லையா என்பவரை எனக்குத்தெரியும் அவர் நாவற்குழியிலுள்ள கொம்பனிஒன்றில் வேலைசெய்பவர். சம்பவதினம் நான் அதே கம்பனியில் சித்திரவேலை செய்துகொண்டிருந்தேன் பிற்பகல் 3 மணிவரையில் மினிவான் ஒன்று 'பிறேக்' அடித்த சத்தம் கேட்டது. நான் அவ்விடத்திற்குஓடிச்சென்றபோது கரையிலேவிழுந்துகிடந்த காலமானவரை மினிபஸ்லிஸிருந்து இறங்கிச் சிலர் வானில் ஏற்றினர்."

நாவற்குழி விபத்து மரண வழக்கில் சாட்சிய மளிக்கையில்மானிப்பாயைச்சேர்ந்த சித்திரக்கலைஞர் பொன்னையா இராசதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்டநீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது

இவ்வழக்கில் 82 மார்ச் 1-ல் நாவற்குளியில் ஒரு கம்பனியில் வேலைபார்க்கும் எஸ். செல்லையா என்பவரை வேலணையைச்சேர்ந்த இரத்தினம் படிகலிங்கம் என்பவர் மினிவானினுல் மோதி மரணத்தை உண்டுபண்ணியதாகக்குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி செ.அம்பிகைபாலனும் எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம் சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் அனுசரணையுடனும் ஆஜராகினர்.

தொடர்ந்து இராசதுரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: விபத்து நடந்த இடத்திற் சற்றுத்தூரம்தான் 'பிறேக்' அடித்து நிற்பாட்டப்பட்டது. வானிலிருந்து இறங்கிச் சிலர் தூக்கிவானில் ஏற்றும்போது இவர் கம்பனியில் வேலைசெய்பவர் கம்பனிமுதலாளிக்கு அறிவித்துவிட்டுக் கொணடுசெல்லுங்கள் என்றேன்.

குறித்தவான் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றது. பிறேக்அடித்த இடத்தில் வீதிக்கு இடப்புறத்தில் காலமானவரின் சைக்கில் கிடந்தது. சைக்கிள் கிடந்த இடத்திலிருந்து 25 யார்தூரத்தில் பிரேக் அடித்த அடையாளம் காணப்பட்டது. கம்பனி முதலாளிவந்து பார்த்துக் காலமானவரை யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ருர் பின் அவர் அங்கேயே காலமானதாகச் செய்திகிடைத்தது நான் யாழ். வைத்தியசாலையில் நடந்த மரணவிசாரணையிற் சாட்சியமளித்தேன் பின் பொலிசாரும் எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கத்தின் குறுக்கு விசாரணைக்குப் பதிலளிக்கையில் சாட்சிகூறியதாவது:

பிறேக் அடித்தசத்தத்திற்கு நான் உடனே திரும்பிப்பார்த்தேன். நான் நின்ற இடத்திலிருந்து 40, 50 அடி தூரத்தில்தான் இச்சம்பவம் நடந்தது உடனே ஓடிச்சென்று காலமானவரைப் பார்த்தேன் அவர் ஓடிச்சென்ற சைக்கிளில் எந்தவித சேதமுமில்லை நான் போனபோது 4, 5 பேர் வானிலிருந்து இறங்கித் தூக்கினர். வானுல் இறங்கியவர்களைத் தவிரவேறு எவரும் அங்கு நிற்கவில்லை.

பொலிசார்சம்பவஇடத்தை அன்று பார்க்கவில்லை அடுத்த நாள் பொலிசார் சம்பவஇடத்தைப்பார்வையிட்டனர். நானும் நின்றேன். ஆனுல் எதிரி அவ்விடம் நின்றதோ நிற்கவில்லையோ என்பது தெரியாது. [க]

## பிரிவுபசாரம்

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணியாக கடமையாற்றி அங்கிருந்து விலகி கொழும்பு செல்லும் சட்டத்தரணி திருமதி. மோகாந்தி பீரிஸ்ஸிற்கு மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் பிரிவுபசாரம் அளித்துக் கௌரவித்தனர்.

மல்லாகம் நீதிமன்ற அறையில் சட்டத்தரணிகள் சங்கத்தினரால் நடத்தப்பட்ட இப்பிரிவுபசார விழாவில் சட்டத்தரணிகள் பலர் கலந்து கொண்டனர். தேநீர் விருந்துபசாரமும் இடம் பெற்றது. [க]

## வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலாஜோதி சனசமூகநிலையத்தின் 24வது வருடாந்த இல்ல விளையாட்டு விழாவும், பாரதி விழாவும் இன்று சனிக்கிழமை நிலையத் தலைவர் திரு. நா. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கருத்தரங்கு, கலைநிகழ்ச்சி, பரிசளிப்பு ஆகியனவும் இடம் பெறவுள்ளன. (வெ)

## "கிராமோதயசபை கைநூல் வழங்கப்படும்"

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கில் கிராமோதய சபைகளின் அமைப்பு, சட்ட விதிகள் பற்றி கிராமோதைய சபைகளின் உறுப்பினர்களுக்கு கைநூல் ஒன்று வழங்கப்படஉள்ளது.

கிராமோதய சபைகளின் அமைப்பு பற்றி கிராமோதய சபை உறுப்பினர்கள் மத்தியில் சரியான விளக்கங்கள் அளிக்கப்படாமையால் இச்சபைகளை திறம்பட இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு அ. அமிர்தலிங்கத்திடமும் கிராமோதய சபைகளின் உறுப்பினர்கள் முறையிட்டு கிராமோதய சபைகளின் அமைப்புப் பற்றி சரியாக அறியமுடியாத நிலையில் அவற்றை வளர்ப்பது எப்படி? எனவும் கேள்வி எழுப்பினர்.

இதற்கு திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கையில் கிராமோதய சபைகளின் அமைப்பு சட்டவிதிகள் பற்றி 'கைநூல்' ஒன்று சகல கிராமோதய சபை உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் தற்போது கிராமோதய சபைத்தலைவர்களுக்கு இந்நூல் அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் என்ருர்.

## கால்நடை வளர்ப்புத்திட்டம்

[கொழும்பு]

நாட்டின் பல மாவட்டங்களையும் இணைக்கும் வகையில் பாரிய கால்நடைவளர்ப்புத திட்டம் ஒன்றினை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் செயல்படுத்தும் திட்டத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

இப்பாரிய கால்நடைவளர்ப்புத்திட்டம் 42 கோடியே 70 லட்சம் ரூபா முதலீட்டில் செயற்படுத்தப்படவுள்ளது. இந்த முதலீட்டில் அரைவாசிக்குமேற்பட்ட தொகையான 35 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு உதவியாக வழங்கவுள்ளது. (உ-வெ)

## உற்சவமும் 50 வது ஆண்டு நிறைவு விழாவும்

(வவனியா)

விடத்தல் தீவு புனித அடைக்கலமாத ஆலய வருடாந்த உர்சவ விழாவும், 50 வது ஆண்டு நிறைவு விழாவும் மிகசிறப்பாக நடைபெற்றது.

மன்னுர் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மன்னுர்மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. பி. எம். செபமாலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

திருநாள் திருப்பலிபூசையை அருட்திரு எமிலியனுஸ் பிள்ளையும், அருட்திரு மொன்பேட்டும் இணைந்து நடத்தினர்.

அன்னையின் திருச் சுருபபவனியும் திருச்சுருப ஆசீர்வாதமும் இடம் பெற்றது.

## சந்திக்குச்சந்தி குப்பைத்தொட்டி

(மன்னர்)

மன்னர் கிழக்கு கிராமோதய சபை எல்லைக்குள் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு சந்தியிலும் குப்பைத்தொட்டிகள் வைக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை மன்னர் கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் ஜனுப் என். எம். இக்பால் மேற்கொண்டு வருகிறர்

## வரட்சி தணிந்தது

சென்னை, செப். 17

தமிழகத்தின் வரட்சி நிலைமை ஓரளவுக்குத் தணிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் பரவலான மழையும் உதக மண்டலம், குண்டாப் பகுதியில் நல்ல மழையும் பெய்துள்ளது.


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6–15, 9–30
சனி, ஞாயிறு 2–30
ஞானக்குழந்தை

றீகல் [யாழ்.நகர்]
தினசரி 10–30, 2–30, 6–15 9–30
ரஜனிகாந்த்–ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி [யாழ்.நகர்]
17—19
Daily 5 Shows
Hayley Mills in
Twisted Nerve
(Color)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி 10–30, 2–15, 4–45, 7–15, 9–30
DEATH DIAMENTIoN

ஶ்ரீதர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்–மஞ்சுளா–லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

ராணி (யாழ் நகர்) இன்று 78வது தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி–சுஜாதா–ஶ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
10–30, 2–15, 4–45, 7–15, 9–30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

5-வது மகளிர் வாரம்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ சந்திரசேகர் ★ சுபாஷினி ★ ராஜீவ்
பாலைவனச்சோலை
விரைவில்: வசந்தமாளிகை
சிவாஜி, வாணிஶ்ரீ
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி


# வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7–ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். நடனம் — பரதம் முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

## நடனம்-பரதம்

## யாழ்ப்பாணம்-நல்லூர்

### இரண்டாம் பகுதி

### முதலாம் பிரிவு

பரதம்: நிரஞ்ஜனு கனகேந்திரன் நிரஞ்ஜனி வாமதேவன், தமயந்தி சோமாஸ்கந்தராஜா, கௌரி கந்தையா, கந்தையா றமணன், அனுஷ்யா ஞானமித்திரன், சுகந்தினி கனகலிங்கம், மாலதி சண்முகலிங்கம், சிவதந்சினி புண்ணியகிங்கம், புஸ்பறஞ்சினி சுந்தரலிங்கம், திருமகள் குருநாதன், ஹரிணி உமா இந்திரபாலா, தமயந்தி நித்தியானந்தன்.

### இரண்டாம்பிரிவு

பரதம்: விஜி நகுலேஸ்வான். கலாவதி சுப்பிரமணியம், மஞ்சுளா பஞ்சாட்ரசர்மா, சைலாணி சுப்பிரமணியம், கலாறஜனி நவரெட்ணம், கீதாஞ்சனு பத்மநாதன், யசோதர கனகசபாரத்தினம், பிரயதர்சினி சுதாமா, வாசுகி சிவபாதசுந்தரம், தமிழ்ச்செல்வி காசிலிங்கம், தருமசுந்தரி முத்துக்குமாரசாமி, அருந்ததி பாலசிங்கம், ஷோபனு பெனடிக்ற், றெஜீனு பஞ்சலிங்கம். சாருமதி நடராசா, வாசுகி சதானந்தன், சறேஜா இராசையா.

### சாதாரண சித்தி

பரதம்: வடிவாம்பிகை பூங்கோதை துரைராசா, சுகன்யா செல்வரத்தினம், அபிராமி பாலசுப்பிரமணியம், சித்திரா நந்தி யோகராஜா, யசோதா மார்க்கண்டு துஷித்தா தியாகராசா, வாசுகி சொக்கலிங்கம், வத்சலா தியாகராசா, சிவாநிதி இராஜரட்ணம்.

## மானிப்பாய்

### முதலாம் பிரிவு

பரதம்: சிவதகங்கா சிவப்பிரகாசபிள்ளை, f ஆனந்தபைரவி குமாரசாமி.

### இரண்டாம் பிரிவு

பரதம்: துஷ்யந்தி துரைச்சாமி, ரூபி சியாமினி யோகசீலன், ஜெயந்தினி ஐயாத்துரை. மாலதி மகேந்திரநாதன், மைதிலி கந்தையா, சாந்தினி செல்வராஜா.

### இரண்டாம்பகுதி சாதாரணசித்தி

கிருஷாந்தி உலகநாதன், சாரதா சங்கரப்பிள்ளை, சூரியவதனி குலசூரியன், ரூபவதனி கந்தையா.

## கொக்குவில்

### முதலாம்பிரிவு

யசோதினி நடேசன், f உமா இராமநாதன், f நகுலினி நடராஜா, கிருஷ்ணராசினி காசிப்பிள்ளை, நிவேதிதி சிவானந்தன், f குகாநந்தினி திருஞானம், கஜனி துரைசிங்கம், ஶ்ரீரூபினி சுப்பிரமணியம், கீதா இராசரத்தினம், பிரேமலதா மாயாதிரவியம்.

### இரண்டாம் பிரிவு

ருஜினி செல்வராசா, சுபாசினி தேவராசா, ஜெயகேசி மகாதேவன், கிருஷ்ணலீலா காசிப்பிள்ளை, மாலினி தியாகராசா, கலைச்செல்வி சண்முகநாதன், சுகந்தி மகேந்திரராசா, துஷ்யந்தி இராஜரெட்னம்,

## ஊர்காவற்றுறை

### இரண்டாம்பகுதி இரண்டாம்பிரிவு

ஞானம்பிகை விக்னேஸ்வரன், சாந்தா திருவேங்கடம், f ஆனத்தி சிவன்.

## தெல்லிப்பழை

### முதலாம்பிரிவு

வசந்தினி நவரட்ணம், வாகினி விஜயரத்தினம், மேரி சுரூபினி செல்லையா, மங்களவனி குணரத்தினம் சுகந்தி இராமநாதன்.

### இரண்டாம்பிரிவு

தர்மவதி சுந்தரமூர்த்தி ஐயர், தமிழ்ச்செல்வி சுந்தரலிங்கம், சிவானி விஜயரத்தினம், கலைவாணி சோமாஸ்கந்தர், சுபாங்கி சுப்பிரமணியம், அனுஷா சந்திரன் ரேறுகினி மயில்வாகனம், மனோரதி நவரத்தினம், சுபாஜினி இராஜகோபால், வசந்தி சிவகுரு, ஜானகி சண்முகநாதன், ஆனந்தி சுப்பிரமணியம், வானதி இராமசாமி, சுந்தரக்குமாரி சரவணக்குமார், அம்புஜா இராசரத்தினம்.

பரதம்: யோகமலர் லீயோ, தங்கேஸ்வரி சரவணபவான், யோகசுந்தரி குமாரசுந்தரம்.

### சாதாரணசித்தி

பரதம்: வாசுகி யோகீஸ்வரன், கிருபாசக்தி தங்கவடிவேல், ரதிதேவி அம்பலம், சுயேதா சித்தியானந்தன், லவன்ரீனு நடராஜா, ஜெனனி கணேசன் கிரியாசக்தி இளையதம்பி, சக்தியகலா பாலசுப்பிரமணியம், பற்றிசியா கல்யாணி ஐயாத்துரை.

## பருத்தித்துறை

### முதலாம் பிரிவு

பரதம்: பத்மரிதி தாமோதரம்பிள்ளை, தேன்மொழி இராமகுருஷ்ணன், இன்பமலர் பரமலிங்கம், மீரா பாலசிங்கம், ஜெயஶ்ரீ தனநாயகம், மணிமேகலை ஆழ்வாப்பிள்ளை, பாமினி சண்முகநாதன், சூரியகலா செல்லையா, திருச்செல்விகயிலாயர்.

### இரண்டாம்பிரிவு

பரதம்: சாந்தினி கிருஷ்ணசாமி, சுகிர்தா பூலோகசுந்தரம், f விஜயா செல்வநாயகம், தமயந்தி குணபாலசிங்கம், செந்தமிழ்ச்செல்வி துரைரத்தினம், சியாமளா சண்முகலிங்கம், இராகினி இம்மானுவல், சூரியகுமாரி வல்லிபுரம், குமுதினி இராசதுரை, கயல்விழி சுப்பிரமணியம், வைதேசி கதிரவேற்பிள்ளை.

### சாதாரணசித்தி

பரதம்: யோகாம்பிகா துரைராசா, மேகலா சதாசிவமூர்த்தி.

## சாவகச்சேரி

### முதலாம்பிரிவு

பரதம்: சீதா தாமோதரம்பிள்ளை, அற்புதராணி கந்தசாமி.

### இரண்டாம்பிரிவு

பரதம்: விமலகுமாரி ஏரம்பமூர்த்தி, ராதா தாமோதரம்பிள்ளை, வ ணி கதிரேசு, கல்பனு பாலக்கிருஷ்ணன், பிறீனு சொலமன்ஸ்.

[தொடரும்]

# லொறிவிபத்து வழக்கு: நஷ்டஈடாக ரூ. 3600 வழங்க இணக்கம்

(சாவகச்சேரி)

லொறிவிபத்து வழக்கில் சாவகச்சேரியைச் சேர்ந்த குமாரசாமி தவராசசிங்கம் என்பவருக்கு நஷ்டஈடாக 3600 ரூபா கொடுக்க இணக்கம் ஏற்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 81 செப்டெம்பர் 21ல் சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பையா செல்வரத்தினம் என்பவர் தமது லொறியால் குமாரசாமிதவராசசிங்கத்தின் காருக்கு மோதி சேதம் விளைவித்ததால் நஷ்டஈடாக ரூபா 3,600 கொடுக்க வேண்டும் என வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது

எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே தவணைப்பணமாக 82 அக்டோபர் 25க்குள் 1500 ரூபா கட்டும்படியும், மிகுதிப்பணம் கட்டும் திகதி அன்றையதினம் கூறப்படும் எனவும் நீதிபதிதெரிவித்தார்.

முறைப்பாட்டுக்காரர் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜராகினர்.

(க–வெ)

# "ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளும் இடம்பெற வேண்டும்"

## சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

[மட்டுவில்]

"இலங்கை தொலைக்காட்சி நிறுவனமான ரூபவாஹினி தமிழ் கலைகலாச்சார நிகழ்ச்சிகளையும் கூடியளவு நிகழ்ச்சிகளில் சேர்த்துக்கொண்டுதமிழ் நேயர்களின் விருப்பத்தையும் பூர்த்திசெய்யவேண்டும். சிங்கள நிகழ்ச்சிகளை மட்டும் சேர்த்துக்கொண்டு தமிழ் நிகழ்ச்சிகளில் அக்கறைகாட்டாமல் விடும் நிலைமாறவேண்டும்."

இவ்வாறு ரூபவாஹினி தொலைக்காட்சியில் தமிழ்கலை, கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு தினமும் போதியளவு சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும் என்று இராஜாங்க அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் சாவகச்சேரி நகரசபை மாதாந்தக்கூட்டத்தில்ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரசபை தலைவர் திரு. சி. க. மயில்வாகனம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இத் தீர்மானத்தை சபைத் தலைவர் திரு. சி. க. மயில்வாகனமே கொண்டுவந்தார். அவர் இத்தீர்மானத்தின் மீது பேசுகையில் கூறியதாவது:

இன்றுரூபவாஹினிதொலைக் காட்சியில் தினம் ஒரு தமிழ்ச் செய்தியைத்தவிர, சிலசமயங்களில் மட்டும் ஒரு தமிழ் நிகழ்ச்சி இடம்பெறுகிறது. தமிழ் திரைப்படம் காட்டுவது அடியோடு கைவிடப்பட்டுள்ளது. விளையாட்டு நிகழ்ச்சிகள் சிங்கள மொழிமூலமே காண்பிக்கப்படுகிறது. இன்று இலங்கையில் பரவலாக தமிழர்களும் தொலைக்காட்சியைப் பாவிக்கிறுர்கள். தொலைக் காட்சிசேவையில் தமிழ் கலை, கலாச்சாரநிகழ்ச்சிகளுக்கும் போதியளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். என்றும் தெரிவித்துள்ளார்

இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(க–வெ)

## நெற்பயிர் பாதிப்பு

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேசத்தில் சிறுபோக நெற் செய்கையில் நெல் விளைவு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள இவ் வேளையில் கொடிய பூச்சித் தாக்கம் ஒன்று ஏற்பட்டு பெரும் தொகையான நெல் வயல்களை நாசம் செய்துள்ளன.

குறிப்பாக தென்னியன் குளம் பகுதி விவசாயிகளின் நெல்வயல்களிலே இந்த கபில நிற தத்துக்கிளியின் தாக்கம் காணப்பட்டுள்ளது.

## கால்வாய் புனரமைப்பு

(வவுனியா]

தேசிய இளைஞர் மன்றம் கல்மடு பகுதியில் 30 இளைஞர், யுவதிகளைக் கொண்டு கால்வாய் ஒன்றினை புனரமைக்கும் வேலையை ஆரம்பித்துள்ளது.

இக்கால்வாயைச் சீர்திருத்த 12,000 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கல்மடு கி மு. ச தலைவர் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

# "இலங்கைத் தமிழர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டபோது முதலில் குரலெழுப்பியவர் அண்ணுவே"

## அண்ணுபிறந்தநாள்விழாவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு இன்னல் ஏற்படும்போதும், இழைக்கப்படும்போதும் முதல் குரல் கொடுத்தவர் அறிஞர் அண்ணுவே. இன்று அவர் பெயராலும், வழிகாட்டுதலின்படி இயங்கும் தமிழக ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் தமது வேற்றுமைகளை மறந்து இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தும், அக்கறைகொண்டும் செயல்படுகின்றன. அறிஞர் அண்ணுவும், அவர் காட்டியவழியுல செல்லும் தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனும், தமிழக எதிர்க்கட்சி முதல்வர் கலைஞர் மு கருணுநிதியிம், தமிழக ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களும், எமக்காகக் குரலெழுப்பி எமது நலனில் கவனமெடுத்துவருவது தமிழன் என்ற இரத்தபாசத்தை எடுத்துக் காட்டுகின்றது''.

இவ்வாறு யாழ். குருநகரில் அறிஞர் அண்ணுவின் பிறந்த தினத்தை முனிட்டு எடுக்கப்பட்ட விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் கூறினர்.

திரு.ரெமிதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு அ.அமிர்தலிங்கம் குருநகரிலுள்ள அண்ணுவின் சிலைக்கு மலர்மாலை சூட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவில் திரு.அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''ஒரு ஆண்டுதான் அறிஞர் அண்ணு முதலமைச்சராக இருந்து தமிழன் தலைநிமிரச் செய்தார். அவர் இன்றுவாழ்ந்திருந்தால் நமது இனத்தின் நிலை வேருக அமைக்கப்பட்டிருக்கும். 20ம் நூற்றுண்டில் தமிழ்மக்கள் மத்தியில் சிந்தனைப்புரட்சி, சமூகப்புரட்சி, அரசியல்புரட்சிகளை ஏற்படுத்தினர். இனஎழுச்சியை, விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தமிழகத்தில் மட்டுமன்றி இங்கு நமக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றி அண்ணுவழி செல்லவேண்டும். அணமையில் நான் தமிழ்நாடு சென்றிருந்தபோது தமிழக முதல்வருடனும், கலைஞருடனும் எமது இளைஞர்களின் விழிப்புணர்ச்சி பற்றி பேசினேன். நமது இளைஞர்கள் எம்மிடையேயுள்ள மூடநம்பிக்கைகளை அகற்றி ஒற்றுமையை ஏற்படுத்த உழைக்க வேண்டும் அண்ணுவின் வழி செல்ல வேண்டும்'' என்றுர்.

இவ்விழாவில் யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம்.பி. திரு. மு. ஆலாலசும்தரம், யாழ்.மாநகர சபை ஆணையாளர் திரு. சிவஞானம், யாழ்.மாநகர சபை உறுப்பினர் டாக்டர் ஏபிரஹாம் ஆசியோரும் அண்ணுவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர். (உ-வெ)

## இப்படியும் நடக்கிறது

விதி யாரை விட்டது?

நைஜீரியாவில், சிமெந்து தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தியாகோ என்பவர் திடீரென யாழ்நகர்வந்து சேர்ந்தபோது—

காலடி வைத்த அரை மணி நேரத்தில் தனது வயோதிபத் தாயை இழந்துவிட்டார்!

எப்படியோ சந்தியாகோ அதிர்ஷ்டசாலிதான்!

ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலிருந்துவந்து தன்தாயின் கடமையைச் செய்ய ஆண்டவன் துணைபுரிந்துவிட்டான்! ஆயிரத்தில் ஒருவருக்கும் இப்படியும் நடக்குமா?

'ஊடுருவி,

# லட்ச ரூபா வான் பறிமுதல் அபராதம் ரூபா 30 ஆயிரம்

(யாழ்ப்பாணம்)

கடத்தலில் ஈடுபட்டிருந்த வானென்றை அதிவேகமாகத் துரத்திச் சென்ற யாழ். பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்து வானை மடக்கி அதிலிருந்த மூவரைக் கைதுசெய்து கடத்தல் பொருள்களைக் கைப்பற்றினர். ஒட்டுமடம் சந்தியில் வைத்தே இந்தக் கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை மணிக்கு அரியாலையிலிருந்து சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 8 மூடை பீடி இலைகள் வானென்றில் கடத்திச் செல்லப்படுவதாக யாழ். பொலிசாருக்கு இரகசியத்தகவல் ஒன்று கிடைத்ததாம்.

யாழ் பொலிஸ் சார்ஜன்ட் சோமரத்ன தலைமையில் ஜீப் ஒன்றில் சென்ற ஆயுதம் தாங்கிய பொலிசார் சம்பந்தப்பட்ட வானை கலைத்துச் சென்று ஒட்டுமடம் சந்தியில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மடக்கிப் பிடித்தனர்.

இக்கடத்தலில் சம்பந்தப்பட்ட மூவரையும் பீடி இலை மூடைகளையும் கடத்தலுக்குப் பயன் படுத்தப்பட்ட வானையும் யாழ். சுங்க இலாகாவில் பொலிசார் ஒப்படைத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மாவட்ட சுங்ககலெக்டர் எஸ். எம். ஜே. சேனரத்ன கடத்தலில் சம்பந்தப்பட்ட மூவருக்கும் முறையே ரூ. 15 ஆயிரம், ரூ. 10 ஆயிரம், ரூ, 5 ஆயிரம் அபராதம் விதித்ததுடன் பீடி இலை மூடைகளையும், வானையும் பறிமுதல் செய் செய்யும்படி உத்தரவிட்டார்.

வானின் பெறுமதி ஒரு லட்சம் ரூபாவாகும். [மா]

## சித்தவைத்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ச்சி, சித்த வைத்திய நூல்வெளியீடு, சித்த வைத்திய பல்கலைச்கழக மட்டத்தில் போதனை ஆகியவையே இக்கல்லூரியின் நோக்கங்களாக இருக்கும்.

இக்கல்லூரியை மாவட்ட அபிவிருத்திசபை 01-01-1983 இல் ஆரம்பித்து நடத்துவதென்றும, தற்பொழுது நடைபெற்றுவரும் யாழ் இலங்கை சித்த ஆயுர்வேத கல்லூரியை இக்கல்லூரியோடு இணைப்பதென்றும், யாழ். இலங்கை சித்தஆயுர்வேதக் கல்லூரியின் தற்போதைய மாணவ, மாணவிகளையும், விரிவுரையாளர்களையும் உள்ளெடுத்து இக்கல்லூரியை ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சித்த வைத்தியத்துறை அபிவிருத்தியை மேற்கொள்ள கைதடியில் சித்தவைத்தியக் கல்லூரிக்கென கட்டப்பட்ட கட்டிடத்தில் சித்தவைத்தியக் கல்லூரியொன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்ஓர் அங்கமாக நடத்துவதற்கு ஏற்றநடவடிக்கைகள் எடுப்பதென்றும், அவ்வாறு நடவடிக்கை எடுத்து அது சாத்தியப்படாத பட்சத்தில் அக்கல்லூரியை யாழ்ப்பாணம் அபிவிருத்திசபை பொறுப்பேற்று யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை முன்னர் தீர்மானித்த தற்கமைய பல்கலைக் கழகத்தில் ஓர் அங்கமாக இக்கல்லூரியை இயங்கச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள்பற்றி பல்கலைக்கழக உபவேந்தரோடு நடாத்திய பேச்சுவார்த்தையில் உடனடியாகப் பல்கலைக்கழகம் இக்கல்லூரியை ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், பல்கலைக்கழக தராதரத் தேவைகளுக்கமைய கல்லூரி இயங்கும்பட்சத்தில், அக்கல்லூரியைப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்பது சாத்தியமானதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கிணங் உடனடியாகக் கல்லூரியை யாழ்.மாவட்ட அபிவிருத்திசபை ஆரம்பித்துநடத்துவதென்றும் பல்கலைக்கழக மானியக்குழுவின் அனுமதி பெற்று பல்கலைக்கழகத்தின் ஓர அங்கமாக இக்கல்லூரியை ஆக்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (மா—அ)

# கிரிக்கெட் டெஸ்ட்

## இலங்கை 8-311

[சென்னை]

இலங்கை – இந்திய கிரிக்கெட் டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கோஷ்டி எட்டு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு மொத்தம் முந்நூற்று பதினெரு ஓட்டங்கள் பெற்றுள்ளது.

மேற்படி கிரிக்கெட் டெஸ்ட் நேற்றுக்காலை சென்னையில் ஆரம்பமானது.

முதலில் இலங்கை கோஷ்டி துடுப்பெடுத்தாடியது.

டுலிப் மென்டிஸ், கவர்ச்சிகரமாக விளையாடி 112 ஓட்டங்களையும், ரோய் டயஸ் 68 ஓட்டங்களையும், அர்ஜுன ரணசிங்க 25 ஓட்டங்களையும், ரஞ்சன் 46 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய தரப்பில் டுலிப் தோஷி 85 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 05 விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தார். மதன்லால் இரண்டு விக்கட்டுகளை வீழ்த்திஞர்.

நேற்று ஆரம்பமான ஐந்து நாள் கிரிக்கெட் டெஸ்ட் ஐந்து நாள் வரை நடைபெறும்.

## அறுவர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டு பத்திரங்களை ஆங்கிலத்திலும். ஒரு பத்திரத்தைச் சிங்களத்திலும் நிரப்பிக் கொடுத்தார்.

நவசமசமாஜ கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவ நாணயக்கார மூன்று பத்திரங்களையும் சிங்களத்திலேயே நிரப்பிக்கொடுத்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைவர் திரு. ரோகண விஜேவீரா தமது மூன்று பத்திரங்களையும் சிங்களத்திலேயே நிரப்பிக்கொடுத்தார்.

லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த திரு, கொல்வின் ஆர். டி. சில்வா ஒரு பத்திரத்தை ஆங்கிலத்திலும், மற்றைய இருபத்திரங்களையும் சிங்களத்திலும் நிரப்பிக் கொடுத்தபர்.

### ஒரே பார்வையில்

ஜனதிபதித் தேர்தலில் போட்டியிடுவோர் விபரம் வருமாறு:

திரு. ஹெக்டர் கொப்பேகடுவ (ஸ்ரீ. ல. சு. கட்சி] (தேர்தல் சின்னம் கை) திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன (ஐ. தே. கட்சி [தேர்தல் சின்னம் யானை] கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா (ல. ச. ச. கட்சி] தேர்தல் சின்னம் திறப்பு) திரு.ரோகண விஜேவீர [மக்கள் விடுதலை முன்னணி] தேர்தல் சின்னம் மணி], திரு. வாசுதேவ நாணயக்கார [நவசமசமாஜக்கட்சி) தேர்தல் சின்னம் குடை], திரு. குமார் பொன்னம்பலம் (அ. இ. த. கா. கட்சி) தேர்தல் சின்னம் சையிக்கிள்]. (ம)

## வங்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்தலத்துக்கு வந்தனர்.

பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கி அலுவலகத்துக்குச் சென்ற பொலிசார் அந்தப் பார்சலை முதலில் கற்களால் தாக்கிப் பரீட்சித்துப் பார்த்தனர். அது வெடிக்க மறுத்துவிட்டதும் முடிவில் அண்மையிலிருந்த பாழடைந்தகிணற்றுக்கு அப்பார்சல் அனுப்பப்பட்டது. (மா]

## சைக்கிள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்துள்ளது,

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வங்கி அலுவலகம் ஒன்றுக்கு அருகில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு முன்பாக நேற்றுப்பகல் சுமார் இரண்டரை மணியளவில் இச்சம்பவம் நடந்ததாக சைக்கிளைப் பறிகொடுத்த நபர் முறைப்பாடு செய்துள்ளார்.

குறிப்பிட்ட நிறுவனத்துக்கு முன்பாகபலசைக்கிள்கள்நிறுத்தப்பட்டிருந்தன என்றும், இவற்றில பூட்டப்பட்டிருந்த ஒரு சைக்கிள் மர்மமானமுறையில் மறைந்ததாவும் சம்பந்த பட்ட நபர் புகார் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பூட்டப்படாத சைக்கிள்கள் பரவலாகத் திருட்டுப்போகும் நிலையில், பூட்டப்பட்டிருந்த சைக்கிள் களவு போனதுவிசித்திரமாக இருப்பதாக பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மகாராஜா நிதி நிறுவனத்தில்

பல்வேறு லொறிகள், வான்கள்

விற்பனைக்கு

இறுதிச்சந்தர்ப்பம்!

நல்ல பாவனையிலுள்ளதும்; செயல்பாடு மிக்கதுமான பாவித்த வாகனங்கள் விற்பனைக்குண்டு. நியாயமான விலைகோருமிடத்து வாகனங்களை பணம் செலுத்தி எடுத்துச் செல்லலாம்.

24 ஸ்ரீ 306 மொறிஸ் லொறி. 24 ஸ்ரீ 6225 மொறிஸ் லொறி.
22 ஸ்ரீ 9562 ஒஸ்ரின் லொறி.
22 ஸ்ரீ 681 மொறிஸ் லொறி. 26 ஸ்ரீ 8461 மொறிஸ் லொறி.
27 ஸ்ரீ 3994 இசுசு ஈ. எல் எப். வான்.
27 ஸ்ரீ 533 இசுசு ஈ. எல். எப். வான்.

வாகனங்களுக்கான ஆகக்கூடிய விலைகோரல் 23-09-82 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மகாராஜா நிதிநிறுவனம்

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 8267

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 1982 [illegible] 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Elanadu — P. O. Box49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.